# ஆசிரை
# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

யூலை மாதத்தில் நாம் பல்வேறு செயல்களை செய்கிறோம். பாடசாலை செயல்பாடுகள் முடிவடைந்து, மாணவர்கள் எல்லோரும் ஓய்வெடுக்கும் காலமாக இக் காலம் உள்ளது. அடுத்தது குளிர்காலம் முடிவடைந்து, வெயில் காலம், கோடைகாலம் ஆரம்பமாகிறது. எல்லோர் மனதிலும் மகிழ்சியும், சந்தோஸம். ஏனென்றால், வெளியில் பல்வேறு செயல்பாடுகளை நாம் செய்ய முடியும். புதிய இடங்களுக்கு சென்று பல அனுபவங்களை பெற்றுக் கொள்ள முடியும். ஓய்வு நேரங்களில் குடும்பங்களோடு பல்வேறு இடங்களுக்கு செல்ல முடியும். ஆற்றங்கரைகளுக்கு சென்று நீச்சல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட முடியும். இம்மாதம் எல்லோருக்கும் மிகவும் செயல்பாடுகள் கூடிய மாதமாக உள்ளது. இம்மாதத்தில் நாம் ஒவ்வொருவரும் இறைவனை தேடுகின்றவர்களாகவும் இருக்க வேண்டும். பல்வேறு செயல்பாடுகளில் நாம் ஈடுபட்டாலும், எம்முடைய உள்ளத்துக்குள்ளேயும் பயணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பயணம் என்பது ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு செல்வது. இப்படியாக செல்லும் போது உண்மையாகவே எமது வாழ்க்கையில் மிகவும் சந்தோஸம் மகிழ்ச்சி உண்டாகுவதை உணர்ந்து கொள்ள முடியும். எமது நாளாந்த செயல்பாடுகளை விட்டு அல்லது ஒதுக்கி வைத்து விட்டு இன்னுமொரு புதிய செயல்பாடுக்குள் நுழையும் போது புதுவிதமான மனநிலை, சிந்தனை போக்கு வருவதை உணரக்கூடியதாக இருக்கும். புதிய சிந்தனை போக்கு எப்பொழுதும் மனிதரை புதிய பார்வைக்கு அழைத்துச் செல்லுவதை உணரக்கூடியதாக உள்ளது. ஒருவிதமான புத்தூக்கம் உற்சாகம், சந்தோஸமான மனநிலை எமது உள்ளத்திலும், மனதிலும், இருப்பதை உணரக்கூடியதாக உள்ளது.

இயேசுவின் காலத்திலும், இயேசு பயணித்தார். ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு பயணித்து இறையரசைப்பற்றி அறிவித்தார். அந்தந்த இடங்களில் இருக்கும் உதாரணங்களை, சம்பவங்களையும், எடுத்து காட்டுக்களையும், பயன்படுத்தி, இறையரசை மக்களுக்கு விளங்கப்படுத்தி மக்களின் மனதை கொள்ளை கொண்டார். உதாரணமாக கடலோரமாக சென்று மீன் பிடித்தலை உதாரணமாக வைத்து இறையரசைபற்றி அப்பகுதி மக்களுக்கு விளக்குகிறார். விவசாய நிலங்களுக்கு சென்று விதைத்தல் உவமையை கூறி விவசாய செயற்பாட்டை எடுத்துக்காட்டாக வைத்து அப்பகுதி மக்களுக்கு இறையரசைப்பற்றி விளக்கம் கொடுக்கிறார். இன்னும் ஆயன் தொழிலை கொண்டு நானே நல்ல ஆயன் என்று சிறப்பான விளக்கம் கொடுப்பதை காணக்கூடியதாக உள்ளது.

எனவே பயணத்தினாலும் நாளாந்த செயல்பாட்டை ஒதுக்கி விட்டு புதிய செயல்பாட்டுக்கு யோசித்த போது எப்பொழுதும் புதிய சிந்தனை ஓட்டம் எமக்கு வருவதை வேதாகமத்திலேயே காணக்கூடியதாக உள்ளது. எனவே நிறைவான சிந்தனையோடும் தெழிவான பர்வையோடும் நாம் புதிய மனிதர்களாக செயல்படுவோம்.

**இறையரசு வளர்க**
**இறையாட்சி மலர்க**

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*
*Montreal (QC), Canada*